# முன்னுரை

**சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் முன்னேற்றுவது பற்றிய நாட்டறிக்கை – 2008. ஜனநாயகம், மனித உரிமைகள், உழைப்பு பணியகத்தினால் 2008 ஆம் ஆண்டு, மே மாதம் 23ஆந் திகதி வெளியிடப்பட்டது.**

"சுதந்திரம் தடுக்கப்படலாம்; சுதந்திரம் தாமதிக்கப்படலாம்; ஆனால் சுதந்திரம் மறுக்கப்பட முடியாது" என்றார் ஜனாதிபதி புஷ். ஜனாதிபதி புஷ் கூறியது போல, மிக மிக அடிப்படைச் சுதந்திரங்களான நம்பிக்கைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் என்ற அடிப்படைச் சுதந்திரங்களை, உலகிலுள்ள நாடுகளில் வாழும் ஆண்களும் பெண்களும் முழுமையாக அனுபவிக்க முடியாத வரை, சுதந்திரத்துடன் வாழும் நாம், உலகம் முழுவதிலும் மனித உரிமைகளையும் ஏனைய ஜனநாயக விழுமியங்களையும் பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் பாடுபட வேண்டும்.

2007 ஆம் ஆண்டின், சனநாயக விழுமியங்களை முன்னேற்றும் அதிகாரச் சட்டத்தைப் பின்பற்றும் முகமாக, உலகம் முழுவதிலும் ஜனநாயகம் நிலவாத நாடுகளிலும் ஜனநாயகம்சார் நிலைமாற்றங்கள் இடம்பெறும் நாடுகளிலும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உயர்த்துவதற்காக ஐக்கிய அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி, இராஜாங்கத் திணைக்களம் இவ்வறிக்கையைத் தயாரித்துள்ளது. மனித உரிமைகளையும் ஜனநாயக நெறிமுறைகளையும் முன்னேற்றுவதற்காக, அரசாங்கச் சார்பற்ற குழுக்களுடனும் தனி ஆட்களுடனும் நாம் நமது ஒத்துழைப்பைத் தொடர வேண்டுமென்றும் இவ்வதிகாரச் சட்டம் மேலும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. அரசாங்கச்சார்பற்ற உள் நாட்டு அமையங்கள், சர்வதேச அமையங்கள் என்பவற்றுடன் பங்காளிகளாக சேவையில் ஈடுபடுதல், சுயாதீனமான சமூகங்களின் விருத்திக்கும் வெற்றிக்கும் அத்தியாவசியம் என்பதுடன், பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கத்தையும் ஜனநாயக மாற்றத்தையும் உறுதிப்படுத்துவதிலும் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

அரசாங்கச்சார்பற்ற அமையங்களுடன் நடத்திய ஆலோசனைகளையும், ஜனநாயகம் நிலவாத நாடுகள், ஜனநாயகம்சார் இடைமாற்றங்கள் இடம்பெறும் நாடுகள் என்பன பற்றிய அதிகாரச் சட்டத்தின் வரைவிலக்கணத்தையும் கருத்திற்கொண்டு, 106 நாடுகளில் நாம் மேற்கொண்ட முன்னுரிமை முயற்சிகளை அறிவித்திருக்கின்றோம். இவ்வறிக்கையில் நாம் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ள செயற்பாடுகள், மனித உரிமைகள், ஜனநாயகம் என்ற துறைகளில் ஐக்கிய அமெரிக்கா கையேற்றுக் கொண்டுள்ள முழு வீச்சிலமைந்த, இரு பக்க நிகழ்ச்சித் திட்டங்கள், பொதுமக்கள்சார் இராஜதந்திரம், பல்பக்கத் தொடங்கு முயற்சிகள், சர்வதேச அமையங்களுடனும் உள் நாட்டு அமையங்களுடனுமான ஒத்துழைப்பு, உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன, விளக்கித் தெளிவாக்குவனவாகவும் அகல் விரிவற்றனவாகவும் இருக்கும்.

அறிக்கை காட்டுவது போல, மனித உரிமைகளும் ஜனநாயக நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டு, பயனுறுதிவாய்ந்த விதத்தில் பாதுகாக்கும் பொருட்டு, உலகம் பூராவும் உள்ள நாடுகளில் காணப்படவேண்டிய மைய மூலங்களைப் பலப்படுத்துவதற்காக நாம்

மேற்கொண்ட நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளில் கவனஞ்செலுத்தியிருக்கின்றோம்: (1) போலியல்லாத, உண்மையான போட்டியை உறுதிப்படுத்தும் களத்தைக்கொண்ட, சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தற் செயன்முறை. (2) சுயேச்சையான சட்டவாக்க மன்றங்களும், நீதித் துறைகளும் உட்படச் சட்ட ஆட்சியின் கீழ் இயங்கும் பிரதிநிதித்துவ, ஒளிவு மறைவற்ற, பொறுப்புக்கூறக் கடமைப்பட்ட நிறுவனங்களுடன் கூடிய நல்ல ஆளுகை. (3) மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் காப்போரையும் சுதந்திரமான ஊடகத்தையும், தொழிற் சங்கங்களையும் உள்ளடக்கிய வீறுள்ள குடிமக்களைக் கொண்ட சமூகங்கள்.

சட்ட ஆட்சியின் கீழ் சுதந்திரத்தை நிறுவும், மக்களின் உரிமைகளை மதிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும், சர்வதேச முறைமையினுள் பொறுப்புடன் நடந்து கொள்ளும், ஜனநாயக நல்லாட்சியை நடத்தும் அரசுக்களின் வட்டத்தை விரிவாக்குவதே நமது நோக்கமாகும். ஐக்கிய அமெரிக்கா, மற்றைய நாடுகளுக்காக இதைச் செய்ய முடியாது. நாங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதும் இல்லை. இது, அவர்களின் தேர்வாக இருக்க வேண்டும் என்பதுடன், அவற்றின் தொடங்கு முயற்சிகளாகவும் இருக்க வேண்டும். எனினும், நாங்கள் உதவ முடியும்; நாங்கள் உதவவும் வேண்டும். இதுவே தோழமை; தோழமை என்பது, விருப்ப உரிமையின்றி, வேண்டியதை அளித்து மக்களைக் கட்டுப்படுத்துவதல்ல. உலகம் முழுவதிலுமுள்ள அரசாங்கங்களுடனும், அரசாங்கம் சார்பற்ற அமையங்களுடனும், தைரியம் மிக்க ஆண்களுடனும் பெண்களுடனும், ஜனநாயகம்சார் மாற்றத்திற்காக நாம் கொள்ளும் தோழமை, எல்லோருக்கும், மேலும் சுதந்திரமான, பாதுகாப்பான உலகைக் கட்டியெழுப்புதற்கு உதவுகின்றது.

இச்சிந்தனைகளுடன், சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் முன்னேற்றும், 2008 ஆம் ஆண்டு மே மாத அறிக்கையை நாம் சமர்ப்பிக்கின்றோம்.

**இலங்கை**

சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் முன்னேற்றும் அறிக்கைகள் - 2008.

ஜனநாயகம், மனித உரிமைகள், உழைப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்டது.
மே 23, 2008

பகுதி 1

அரசாங்கத்திற்கும் தனித் தமிழ் அரசைக் கோரும் அமைப்பாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இன மோதலினால் தொடர்ந்தும் பிளவுகளுக்குள்ளாகிக்கொண்டிருக்கும், நாடாகிய இலங்கை, அரசியல் அமைப்புச்சார், பல் கட்சி, குடியரசாகும். 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம், அரசாங்கப் பாதுகாப்புப் படைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் படைகளைக் கிழக்கிலிருந்து அகற்றின. வடக்கில், இராணுவ மோதல்கள் கிரமமாக இடம்பெற்றுவருகின்றன. 2002 ஆம் ஆண்டு, அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத்தான போர் இடை நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து, 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் தன்னை விடுவித்துக்கொண்டது. மனித உரிமைகளுக்கான முற்றுமுழுதான மரியாதை, நாடு முழுவதிலும் நலிவுற்றது. ஆனால், இந்நிலை, விசேஷமாக, மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உக்கிரமடைந்தது. குடி மக்களுக்கெதிரான ஆயுதத் தாக்குதல்கள், சித்திரவதை, ஆட்கடத்தல், பிணையாக ஆட்களை வைத்திருத்தல், அச்சுறுத்திப் பணம் பறித்தல், நீதி முறைக்குப் புறம்பான கொலைகள் என்பவற்றில் இராணுவம், பொலீஸ், அரசாங்கத்திற்குச் சார்பான துணை இராணுவக் குழுக்கள் பங்குபற்றின என்று பல அறிக்கைகள் ஆவணப்படுத்தியுள்ளன. வடக்கில் பெரும் பிரதேசத்தின் மீது தமது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், தொடர்ந்தும் குடி மக்களைத் தாக்கி, சித்திரவதைகளிலும் ஒரு தலைப் பட்சமான கைதுகள், தடுத்து வைத்திருத்தல் என்பவற்றிலும் ஈடுபட்டனர்; நியாயமான வழக்குகள் மறுக்கப்பட்டது; தன்னிச்சையாக தனிமை நிலையில் தலையிட்டனர்; பேச்சுச் சுதந்திரம், அச்சுலகச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், ஒருங்கிணையும் சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டன. பிள்ளைகள் உட்பட கட்டாயத்தின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்தனர். அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட கொலைகள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், பொதுமக்கள் பிரயாணஞ் செய்யும் பஸ்களுக்குக் குண்டு வைத்தல் என்பவற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர்.

பகுதி 2

மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் உயர்த்துவதற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில், நின்று நிலைக்கும் சமாதான உடன்படிக்கையை எட்டுவதற்குத் தோழர்களுடன் இணைந்து செயற்படுவதைக் கவன மையமாகக் கொள்ளுதல், மோதலின் தாக்கங்களைக் குறைப்பதையும் இணக்கப்பாடு ஏற்படக்கூடிய நிலைமைகளை உயர்த்துவதையும் கவனத்திற் கொள்ளுதல்; அதனுடைய சிறுபான்மை மக்களுக்கு அதிக அளவில் உரிமைகளை வழங்கும் விதத்தில், அரசியலமைப்புரீதியான அதிகாரப் பகிர்வை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு நெருக்குதல்களை ஏற்படுத்துதல்; பொறுப்புக்கூறும் தன்மையையும் ஒளிவு மறைவில்லாத் தன்மையையும் உறுதிப்படுத்தும் முகமாக ஆளுகையைப் பலப்படுத்துதல்; மனித உரிமைத் துஷ்பிரயோகங்களைக் குறைத்து, மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக நீதி வழங்கும்படியான நெருக்குதல்களை ஏற்படுத்துதல்; அச்சுலகச் சுதந்திரம், மதச்

சுதந்திரம் என்பவற்றையும் நியாயமான உழைப்பு நடைமுறைகளையும், பெண்களினதும் பிள்ளைகளினதும் உரிமைகளையும் உயர்த்த முனைதல்; விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கும் இப்பிரச்சினைகளைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசுவதில் ஈடுபடுதல்.

பகுதி 3

ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கான, ஐக்கிய அமெரிக்காவின் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: முஸ்லிங்களுக்கான சமாதானச் செயலகம் தொடர்பாக ஆதரவை வழங்குதல்; மோதலைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஓர் அரசியற் சட்டகத்தை விருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் தேசிய முன்னெடுப்புக்களுக்குத் தொழினுட்ப உதவியையும் பயிற்சியையும் வழங்குதல்; நீதித் துறையைப் பலப்படுத்துதல்; மனித உரிமைகள் கண்காணிப்பு, நல்ல ஆளுகை, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவற்றிற்கு ஆதரவு வழங்கும் வகையில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட வட மத்திய மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சமுதாயப் பொது அரங்கங்களை விரிவாக்குதலும் வலையமைப்பாக்குதலும். சுமாதானச் செயன்முறையை ஒருங்கிணைப்பதற்காக, அரசியலமைப்பு விவகார அமைச்சிற்கும் செயலகத்திற்கும் ஐக்கிய அமெரிக்கா, தொழினுட்ப உதவியையும் பயிற்சியையும் வழங்குகின்றது. சமயச் சுதந்திர மீறல்கள் உட்பட, மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் யாவற்றையும் நிறுத்தி குற்றவாளிகளைப் பொறுப்புக் கூறச் செய்யும்படி, ஐக்கிய அமெரிக்க அலுவலர்கள் அரசாங்கத்தைத் தூண்டியவாறுள்ளார்கள். நாட்டின் மனித உரிமைகள் நிறுவனங்கள் நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தடுப்பதற்கோ அவற்றை அறிவிப்பதற்கோ முடியாத நிலைமையில் இருப்பதால், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் அலுவலகத்தை ஏற்றங்கீகரிக்கும்படியும் ஐக்கிய அமெரிக்க அலுவலர்கள், இடைவிடாது அரசாங்கத்தைத் தூண்டுகின்றனர்.

ஜனநாயக அரசியற் செயன்முறை, நல்ல ஆளுகை, பலம் மிக்க குடியியல் சமூகம் என்பவற்றை உயர்த்துவதற்காகவும், ஐக்கிய அமெரிக்கா உழைக்கின்றது. 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில், சேவைகளை வழங்குவதையும் நிதி முகாமையையும் மேம்படுத்துவதற்காகவும் உள்ளூர்த் திட்டமிடலில் பிரஜைகள் பங்குபற்றுவதை அதிகரிப்பதற்காகவும் ஐக்கிய அமெரிக்காவினால் நிதியிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டம், 1,612 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் உள்ளூராட்சியின் தொழினுட்ப ஆற்றலைப் பலப்படுத்தியது. உள்;ராட்சி தொடர்பான கொள்கைப் பரிந்துரைப்பை ஐக்கிய அமெரிக்கா ஆதரிப்பதுடன், உள்ளூராட்சிக்கான தேசியக் கொள்கைப் பிரகடனம் ஒன்றை விருத்தி செய்யும் பொருட்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிற்கு உதவி வழங்கியது. தேசிய வாக்காளர் பதிவேட்டை கணினிமயப்படுத்தலைப் பூர்த்தி செய்வதற்காக, 2007ஆம் ஆண்டு, ஐக்கிய அமெரிக்கா, வாக்காளர் ஆணையத்திற்கு உதவியது. இணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்கும் பிரஜைகள் அரசாங்கத்தை மேற்பார்வை செய்வதை மேம்படுத்துவதற்குமாக, சமுதாய ஆலோசனைச் செயன்முறையிலமைந்த மக்கள் அரங்குகளுக்கு ஆதரவு வழங்குவதற்காகப் பங்கேற்கும் குடிமக்கள் சமூகத்தைத் தொடர்ந்தும் ஈடுபடுத்தி வருகின்றது. சகிப்புத் தன்மையை உயர்த்தும், ஐக்கிய

அமெரிக்காவின் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, நாட்டில் தெற்கில் செயலூக்கத்துடன் இயங்கும் 12 அரசியற் கட்சிகளும் கிழக்கில் 14 அரசியற் கட்சிகளும், பிராந்திய முன்னுரிமைகள் பற்றிய, மாவட்ட மட்ட பல் கட்சிக் கலந்துரையாடல்களில் பங்குபற்றுகின்றன.

பேச்சுச் சுதந்திரத்தையும் ஊடகச் சுதந்திரத்தையும் உயர்த்துவதற்கான, ஐக்கிய அமெரிக்காவின் முயற்சிகளுள், இராஜதந்திரம், தொழினுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் அடங்குகின்றன. ஊடகங்களின் மீது செலுத்தப்படும் நெருக்குதல்களைப் பற்றி அறிந்துகொள்வதற்காக, பரந்த வீச்சிலமைந்த அமைப்புக்களைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க ஊடக முக்கியஸ்தர்களை, அமெரிக்கத் தூதுவர் கிரமமாகச் சந்தித்து வருகின்றார். ஐக்கிய அமெரிக்காவின் பகிரங்கமான ஆதரவை எடுத்துக்காட்டுவதற்காக, 2007 ஆம் ஆண்டில் அமெரிக்கத் தூதுவர், இரண்டு முக்கிய தமிழ்ச் செய்தித்தாள்களின் அலுவலகங்களுக்கு விஜயம் செய்தார். பிராந்திய ஊடக நிகழ்ச்சித்திட்டமொன்றிற்கு, ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் நிதி வழங்குகின்றது. அத்துடன், ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தெற்கிலும் கிழக்கிலும் உள்ள ஊடக அலுவலகங்கள், மாவட்ட அடிப்படைப் பத்திரிகையாளர்களுக்கும் சமுதாய அடிப்படை அமையங்களின் ஆளணியினருக்கும் பயிற்சியையும் ஆக்கங்களுக்கான ஆதரவையும் வழங்குகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் நிதியுதவியுடன் செயற்படும் வானொளி சேவை படைப்பாளர் தொடர்ந்தும், தெற்கிலும் கிழக்கிலும் மத்திய மலை நாட்டிலும் உள்ள மூன்று, பிராந்திய வானொலி நிலையங்களில், இரண்டு சுதேச மொழிகளிலும் வாராந்தம், நடப்பு விவகார நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றனர்.

பகுதி 4

ஊழல்களுக்கெதிரான முயற்சிகள், நீதிச் சீர்த்திருத்தங்கள், சட்ட ஆட்சியை உயர்த்துவதற்கான முயற்சிகள் மதச் சுதந்திரம் தொடர்பான முயற்சிகள் என்பவற்றிற்கு ஐக்கிய அமெரிக்கா ஆதரவு வழங்குகின்றது. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களைப் புலன் விசாரணை செய்வதற்கான ஆணையத்தையும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தையும் சேர்ந்த 336 ஆளணியினருக்கும் 2007ஆம் ஆண்டு, ஐக்கிய அமெரிக்கா நிதியிட்ட ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று, பயிற்சி வழங்கியது. இலஞ்சம் பற்றிய முதலாவது தேசிய அடிப்படையிலமைந்த இல்ல அளவாய்விற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஆதரவு வழங்கியது. இவ்வளவாய்வு, 2007ஆம் ஆண்டு ஜுலை மாதம் பொது மக்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமென வெளியிடப்பட்டது. நீதி அமைச்சின் சமுதாய இடையீட்டாளர் சபைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடையீட்டாளர்களைப் பயிற்றுவதற்கான மற்றுமொரு ஐக்கிய அமெரிக்க உதவிச் செயற் திட்டம் தொடர்கின்றது. இதே செயற் திட்டம், ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களின் தேவைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் முறைசாரா துணைச் சட்டவியலாளர்களைப் பயிற்றுவதற்காக உழைக்கும் அரசாங்கச் சார்பற்ற அமையங்களுக்கு ஆதரவு வழங்குகின்றது. தற்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஆட்கடத்தலுக்கெதிரான செயற் திட்டங்களுக்கு ஐக்கிய அமெரிக்கா நிதி வழங்குகின்றது. இச்செயற்திட்டங்கள், ஆட்கடத்தல் பற்றிய விழிப்புணர்வு, இலக்கானோரை இனங்காணல் என்பன தொடர்பான சட்டங்களைச் செயற்படுத்துவது பற்றிய பயிற்சியை வழங்குவதுடன், கடத்தற்

குற்றங்களையும் இலக்கானோரையும் மேலும் பயனுறுதிவாய்ந்த விதத்தில் கண்காணிப்பதைச் சாத்தியப்படுத்தும் வகையில், அளவை முகாமைத் தரவுத் தளம் தொடர்பான பயிற்சியையும் வழங்குகின்றது. மதச் சுதந்திரத்தை உயர்த்துவது தொடர்பாக, மதமாற்றத்திற்கெதிரான சட்டங்கள், மதச் சுதந்திரத்தில் எத்தகைய எதிர்மாறான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது பற்றித் தூதுவர் அரசாங்கத்திடம் கவலை தெரிவித்துள்ளார்.

சிறந்த தொழிற் தரங்களையும் தொழிலாளர் பாதுகாப்பையும் உயர்த்துவதற்கென வடிவமைக்கப்பட்ட, ஐக்கிய அமெரிக்காவினால் நிதி வழங்கப்பட்டுள்ள நான்கு வருட நிகழ்ச்சித் திட்டமொன்று, ஏற்புடைய உழைப்பிற்கான தேசியச் செயற் திட்டமொன்றை உருவாக்குவதற்கு உதவிக் கொண்டிருக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவினால் நிதியிடப்பட்டுள்ள மற்றொரு நிகழ்ச்சித் திட்டம், பிள்ளைகளைக் கொண்டு வேலை வாங்கும் மோசமான முறைகளை அகற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதைக் கவன மையமாகக்கொண்ட பயிற்சி, சகல இராணுவ நிகழ்ச்சித் திட்டங்களினதும் பிரதான கூறாக அமைந்துள்ளது. விசேஷமாக, மனித உரிமைகள் மீதும் குடிமக்களுக்கும் - இராணுவத்திற்கு மிடையிலான தொடர்புகளின் மீதும் கவனஞ் செலுத்தும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் விரிவாக்குவதற்காக, ஐக்கிய அமெரிக்கா செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. 2007ஆம் ஆண்டு, கூட்டு இராணுவ, சட்டப் பரிமாற்றமானது மனித உரிமைகள், இராணுவச் செயற்பாடுகளில் மனிதாபிமான சட்டம், போர் நடவடிக்கை விதிகள், இராணுவ நீதி என்பன பற்றிய ஒரு கருத்தரங்கை நடத்தியது.